**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10022025-9810

Volume: 10

Issue: 2

Month: October

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 25.08.2025

Accepted: 22.09.2025

Published: 01.10.2025

Citation:
Paramadevan, T. (2025). The Performing Features of the Ancient Traditional Theyyam Dance. *Shanlax International Journal of Tamil Research, 10*(2), 20–28.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i2.9810

*Corresponding Author:
thakshayinip@esn.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Performing Features of the Ancient Traditional Theyyam Dance

**Thakshayiny Paramadevan**
*Senior Lecturer, Dance, Drama & Theater Arts*
*Swamy Vipulananda Institute of Aesthetic Studies, Eatern University, Srilanka*
*http://orcid.org/0009-0004-2288-721X*

**Abstract**
*Kerala is Often described as 'Godswn Country' a title that its natural beauty and cultural richness truly justify. Among India's ancient art forms, Kerala holds a remarkable place for its traditional dances. The roors of many rural dance traditions such as Theyyam, Kolam, Thullal, Vettatullal, and Chittu Nadakam trace back to this land. One of the most distinctive and tural, is a rutulitic dance deeply interwined with Hindu coutoms and religious practices. It is not merely a dance but a sacred ritual performance. The art form is centered around the Weapons they once wielded. Histrocial references to smilar traditions can be found in ancient Tamil Sangam literature, where warrior worship was known as Velan veriyadal. Comparable traditions exist in other parts of India for instance the Thira dance of north India shares similarities with Theyyam in its performance style. Songs, Costumes, and heroes themes, signifying the cultural continuity of warrior workship throughtout the nation. In thew south canara region of Karnataka smilar ritual dances dedicatied to heroes and spirits are called Bhoota or Kola. Theyyam is beliveved to have originated over 1500 years ago. Its songs and rituals have been preserved through oral transmission across generations. Familes belonging to specific hereditary lineages perform Theyyam as part of their clan traditions, blending workship with community faith and creating unique cultural expressions. Theyyam performances are dedicated to divine beings, animals, ancestral spirits, and even diseases as a form of spiritual offering. Like Kathakali and Kalaripayattu, Theyyam involves elaborate costumes, makeup, and symbolic colors. The performance consists of two main part: Kettum (the preparatoryritual) and Velattam (the dance of valor) Begin inning with solemn workshipand ending in an intense, trance-like climax, the dance evokes deep emotional and spiritual responses. The accompanying musical instruments, ritual songs, and dance movements blend harmoniously to create a powerful artistic and devotional experience. Theyyam festivals are typically held annually in rural ares, lasting from two to seven days.*

***Keywords:*** *Ritual Dance, Clantradition, Spiritpossession, Kettum, Velattam*

**References**

1. Aryan and Dravidian (1977) Elements in Malabar Folklore, Trivandrum.
2. Kurup, K.K.N.(1973) The Cult of Teyyam and Hero Worship in Kerala, Calcutta.
3. Raghavan, M.D. (1947) Folk Plays and Dances of Kerala, Trichur.
4. Thamodharam. M.P.(2008) Theyyam is the best tool for reconstructing the history of north Malabar." Anthropologist 10, Trivandrum
5. https://www.keralatourism.org/artforms/theyyam-ritual/1
6. https://mapacademy.io/article/theyyam/
7. https://www.keralatourism.org/images/ebooks/pdf/theyyam.pdf
8. https://kerala.me/specialities/art-and-culture/theyyam
9. https://youtu.be/CGCKcNSUm5Y?si=f-zg3cW5ezLjw-Kg

# பழமை பொருந்திய தெய்யம் நடனத்தின் ஆடல் சிறப்பு

***கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்***
சிரேஸ்ட விரிவுரையாளர், நடன நாடகத்துறை
சுவாமிவிபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***
*கேரள நடனவகைகளில் ஒன்றுதான் தெய்யம். வடக்கு மலபார் பகுதி முழுவதிலும் பரவலாக நடத்தப்பட்டு வரும் பழங்கால நடனமுறை, இந்து மதப் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் மதத்தோடு பின்னிப் பிணைந்து நிகழ்த்தப்படும் தெய்யம் நடனம் நடனமாக அல்லாமல் சடங்காகவே நினைத்து செய்யப்படுகிறது. குடிவழி சார்ந்த போர்வீரர்களையும் அவர்கள் உபயோகித்த ஆயுதங்களையும் வணங்கி வழிபடுவதே தெய்ய நடனமாகும். வரலாற்றிலும் இது பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன. தமிழிலும் சங்க இலக்கியத்தில் வேலன் வெறியாடல் என்ற பெயரில் வீரர்களை வழிபட்ட வரலாறு உள்ளது. தெய்யம் நடனம் 1500 ஆண்டுகளுக்கு முன்பாக தோன்றியுள்ளது. இவ் நடனத்தின் பாடல்கள் வாய்வழி மூலகமாகவே தலைமுறை தலைமுறையாக பதிவாகியுள்ளன. சிறிய குடிவம்சாவழியினர் தங்களின் குடும்பச் சடங்குகளை மத வழிபாட்டோடு சேர்ந்த கலவையாக்கி புதிய நம்பிக்கைகளைத் தங்கள் சமூகத் தினரிடையே ஏற்படுத்தினர். அவ்வழி வந்த தொன்றுக்கலைகளில் ஒன்றுதான் தெய்யம் நடனக் கலை. கடவுள் வழிபாடு, மிருகவழிபாடு, வியாதிகள், நீத்தார் நினைவுகூறல், பேர் வீரர்கள், முன்னோர்கள் வழிபாடு, சர்ப்ப வழிபாடு போன்றவற்றிக்காகவும் தெய்யம் நடனம் ஆடப்படுவது வழக்கமாகிவிட்டது. தெய்யம் நடனத்தில் தேட்டம் மற்றும் வேலாட்டம் என இரண்டு பகுதிகள் உள்ளன. ஆரம்பவழிபாடாக தொடங்கி இறுதியில் வீர விளையாட்டு போல் ஆக்ரோசத்தோடு உச்சநிலை அடைவதில் நடனம் முடிவடைகிறது. வாத்தியக் கருவிகளின் இசையும், நடனத்திற்கான பிரத்யேகப் பாட்டும், நடனமும் இணைந்து உணர்வெழுச்சி மிகுந்த நடனமாக அமைகிறது.*
***திறவுச் சொற்கள்:*** *சலிட்டு நடனம், குடிவழி, வெறியாடல், தேட்டம், வேலாட்டம், பாட்டு, தெய்யம், ஆடல், நுண்கலை, திறனாய்வு*

**அறிமுகம்**

தொன்மைக் கலைகளிலும் சடங்குகளிலும் சிறப்பான பெயர் கேரளாவிற்கு உண்டு. கேரளாவின் வடக்கே மலபாரிலும் கர்நாட காவின் சில பகுதிகளிலும் வழக்கம் பெறும் சடங்குகளுடன் தொடர்புடைய நடனக்கலை தெய்யமாகும். இந்நடனம் காளியாட்டத்திலிருந்து உருவானது. தெய்யம் கேரள ஆலயங்களில் வேண்டுதல்கள் நிறைவேற்றப்பட்டவுடன் தெய்வங்களுக்கு நன்றி செலுத்தும் விதத்தில் ஆடப் படுகின்றது. “தெய்வம்” என்ற சொல்லில் இருந்தே“தெய்யம்” பிறந்துள்ளது. அம்மனே ஆடுகின்ற தெய்வீக நடனமாகவும் இது கொள்ளப்படுகின்றது. தெய்யம் முன்னோர் வழிபாட்டிலிருந்து தோன்றியிருக்கலாம் எனவும் நம்பப்படுகின்றது. பெரும்பாலான தெய்யங்கள் கேரளாவின் சாதி அமைப்பில் பிற்படுத்தப்பட்ட சாதிகளில் இருந்தவர்களிடமிருந்து தோன்றியதாகக் கருதப்படுகின்றது. மூதாதையர் வழிபாட்டுச் சடங்குகளின் பின்னர் தற்போது காணப்படும் விரிவானசடங்குகளுடன்கூடியநடனங்கள் உருவாக வழிகோலியது என்றும் நம்பப்

படுகின்றது. சடங்கு சம்பிரதாயங்களை முன்னிலைப்படுத்தியும் இந்நடனம் ஆடப்படுகின்றமையால் ஆண்டுதோறும் இடம்பெற்று வருகின்றது. இந்தச் சடங்கு தலித்துக்களாலே ஒழுங்கமைக்கப்படுகின்றது. வரலாறு முழுவதும் தீண்டத் தகாதவர்களாகக் கருதப்பட்ட சமூகங்கள் சாதியமைப்பின் தாக்கம் மத வெளிப்பாட்டின் வடிவம் போன்றனவும் குறிப்பிடப்படுகின்றன.

### ஆய்வு முறையியல்

வரலாற்று, பண்புசார் முறை, விபரணப் பகுப்பாய்வு அணுகு முறைகளைக் கொண்டு ஆய்வு செய்யப்படுகிறது.

### தோற்றம் மற்றும் சமூகப்பின்னணி

பாரம்பரிய கேரள நடன வகைகளில் ஒன்றுதான் தெய்யம். வடக்கு மலபார் பகுதி முழுவதிலும் பரவலாக நடத்தப்பட்டு வரும் பழங்கால நடனமுறை. குறிப்பாக, இந்து மத பழக்க வழக்கங்களின் அடிப்படையில் மதத்தோடு பின்னிப்பிணைந்து நிகழ்த்தப் படும் தெய்யம் நடனம், நடனமாக அல்லாமல் சடங்காகவே நினைத்து செய்யப் படுகிறது. குடிவழி சார்ந்த போர் வீரர்களையும், அவர்கள் உபயோகித்த ஆயுதங்களையும் வணங்கி வழிபடுவதே தெய்யம் நடனம். வரலாற்றிலும் இது பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கிறது. தமிழிலும் சங்க இலக்கியத்தில் வேலன் வெறியடல் என்ற பெயரில் வீரர்களை வழிபட்ட வரலாறு இருக்கிறது. இறந்த வீரர்களின் நினைவாகக் கற்களை நட்டு வழிபடுதல், இசைக் கருவிகளை இசைத்தும், மது அருந்தியும், இலைகளால் ஆடை அணிந்தும் ஆடல்களை நிகழ்த்தினர். கி.மு 500-க்கு முந்தைய பழக்கங்கள்தான் நடனக்கலையாக மெருகூட்டி செம்மைப் படுத்தி நிகழ்த்தப்படுகின்றன.

இந்தியாவில் வடக்கிலும் திரா என்ற நடனக்கலை பல ஆண்டுகளுக்கு முன்பிருந்துள்ளது. தெய்யம் நடனம் போலவே நடன முறை, பாடல், உடை அலங்கரிப்பு, வீரர்கள் என அனைத்தையும் ஒப்பாகக் கொண்டிருக்கும் திரா நடனம், வீரர்களை வழிபடுவது நம் நாட்டின் பாரம்பரியக் கலாசாரம் என்பதற்குச் சான்றாகிறது. வரலாற்றுச் சான்றுகளின்படி தெய்யம் நடனம் 1500 ஆண்டுகளுக்கு முன்பாகதென்னிந்தியாவில்தோன்றியிருக்கிறது. கேரளத் தோட்டங்களில் பாடப்பட்டு வந்த பாடலே தெய்யம் நடனத்திலும் பாடுகின்ற பழக்கம் இருந்தது. எந்த இலக்கியங்களிலும் இது பதியப்படாததால் வாய்வழி மூலமாகவே தலைமுறை தலை முறையாக இப்பாடல்கள் பதிவாகியுள்ளன. பிற்காலத்தில் இவற்றின் சில பாடல்கள் பனையோலையில் பதியப்பட்டன. தெய்யம் நடனக் கலையை தற்போதும் தொடர்ந்து கற்று வருகின்றவர்களிடம் இதற்கான சான்றுகள் உள்ளன. ஆரியர்களின் வருகைக்குப் பிறகு பிராமணரல்லாத சமூகத்தினர் குறிப்பாக, தென்னிந்தியாவில் தங்களுடைய மத நம்பிக்கைகளை புதிய வழிகளில் வெளிப்படுத்திக் கொண்டனர். புராணக் கதைகளும் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றன. சிறியகுடி வம்சாவழியினர் தங்களின் குடும்ப சடங்குகளை மத வழிபாட்டோடு சேர்த்து கலவையாக்கி புதிய நம்பிக்கைகளை தங்கள் சமூகத்தினரிடையே ஏற்படுத்தினர். அவ்வழி வந்த தொண்டு கலைகளில் ஒன்றுதான் தெய்யம் நடனக்கலை. குடிவழி வம்சங்களின் சிறுபான்மை இனத்தவர்களும்சமூகத்தின்அடிமட்டத்தில் இருந்தவர்களான வண்ணான், மாவிலன், வேட்டுவன், வேலன், மலையன், புலையன் போன்ற குடிமக்கள் தெய்யம் நடனத்தோடு நெருங்கிய தொடர்பு உடையவர்களாய் இருந்தனர். பிறகு தொடர்ந்த காலங்களில் கடவுள் வழிபாடு,

மிருகவழிபாடு, வியாதிகள், நீத்தார் நினைவுகூறல், போர்வீரர்கள் முன்னோர்கள் வழிபாடு, சர்ப்ப வழிபாடு போன்றவற்றிற்காகவும் தெய்யம் நடனம் ஆடப்படுவது வழக்கமாகி விட்டது.

கதகளி, களரி, பேயாட்டு போன்ற நடனக்கலைகள் போலவே அலங்காரத்துடன் (தமிழ்நாட்டின் கூத்து, தோல் பாவைக்கூத்து போல) நிகழ்த்தப்படும் தெய்யம் நடனம் குறிப்பாகப் பகவதி மற்றும் விஷ்ணுமூர்த்தி, ரக்த சாமுண்டி போன்ற கடவுள்களை வழிபட ஆடப்படுகிறது. பகவதி கடவுளின் பெயரை ஊர்ப் பெயரோடு இணைத்து வணங்கப்படுவதால் முச்சிலோட்டு பகவதி, கன்னங்காட்டு பகவதி என ஊர்களின் பெயர் சேர்த்து எல்லா ஊர்களிலும் பரவலாக வணங்கப்படுகிறது. தெய்யம் நடனத்தின் மற்றுமொரு முக்கிய அம்சம் அலங்கரிப்பு. உடல் முழுவதும் வண்ணங்களால் வரைந்து தலைக்கு தனியே வடிவமைக்கப்பட்ட கிரீடமும் செய்யப்படுகிறது. வண்ணம் பூசிக்கொள்வதிலும் பல விதங்கள் உள்ளன. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த தெய்யம் நடன வழக்கங்களின் அலங்காரம் இன்று சிதைந்து போகாமல் தொடரப்படுவது அதன் சிறப்பு. தெய்யம் நடனம் வழங்குதலில் தேட்டம் மற்றும் வேலாட்டம் என இரண்டு பகுதிகள் உள்ளன. ஆரம்ப வழிபாடாக தொடங்கி இறுதியில் வீர விளையாட்டு போல் ஆக்ரோசத்தோடு உச்சநிலை அடைவதில் நடனம் முடிகிறது. வாத்தியக் கருவிகளின் இசையும் தெய்யம் நடனத்துக்கென உள்ள பிரத்யோகப் பாட்டும், நடனமும் இணைந்து உணர்வெழுச்சி மிகுந்த நடனமாக அமைகிறது. தெய்யம் நடனத் திருவிழா வருடத்துக்கு ஒரு முறை கேரள கிராமப்புறங்களில் சடங்காக நிகழ்த்தப் படுகிறது. ஒரு நாளில் தொடங்கும் நடனம் இரண்டு மூன்று என ஏழு நாட்கள் வரை தொடர்வதுண்டு.

**தெய்யாட்ட வகையும் நிகழ்த்துகையும்**

சுமார் *456* வகையான தெய்யக் கோலங்கள் உள்ளன. அவற்றில் *112* தெய்யங்கள் பிரபலமானவை. சில பிரபலமான தெய்யங்களாவன பொட்டன் தெய்யம் என்பது வண்ணமயமான சடங்கு நடனமாகும். இத்தெய்யம் சிவனின் வெளிப்பாடு என்று நம்பப்படுகின்றது. பொட்டன் தெய்யத்துக்கு பள்ளியாரா எனப்படும் கட்டிடம் போன்ற சிறிய குடிசை உள்ளது. இது பாரம்பரிய கலை வடிவமான தெய்யத்தில் வருகிறது. இது கொளத்து நாட்டின் பாரம்பரியத்தின் இன்றியமையாத கலையாகும். இது இன்றைய கண்ணூர் மாவட்டம் மற்றும் வடக்கு கேரளாவின் கோழிக்கோடு மற்றும் காசர்கோடு மாவட்டங்களில் இடம் பெறுகின்றது. இந்த தெய்யமானது சமூகத்தில் உள்ள தீமைகளை துடைத்திடு நன்மையைக் குறிக்கும். இந்தத் தெய்யம் சாதிக்கு எதிரான கடவுள், ஒரு சமூக நோக்கத்திற்காக தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்த மூதாதயர்களின் ஆளுமைகளின் வாழ்க்கையைச் சடங்கு வெளிப்பாடுகளில் நிகழ்த்துகிறது. பொட்டன் செய்யும் பாரம்பரியமாக ஒரு பெரிய நெருப்புடன் நிகழ்த்தப்படுகிறது. நிகழ்ச்சிகள் மற்றும் பழக்கவழக்கங்களுக்குப் பிறகு உள்ளூர்வாசிகள் பொட்டன் தெய்யத்திடம் வந்து பேசி அவரது பதிலையும் ஆசீர்வாதத்தையும் பெறுவதாக தெய்யம் புராணம் சொல்லுகின்றது.

கதிவனூர்வீரன் தெய்யம் வடமலபாரில் மிகவும் பிரபலமான ஒன்று. மந்தப்பன் சேவகர் என்றும் அழைக்கப்படுகின்றார். மந்தப்பனின் வாழ்க்கை மற்றும் அவர் கடவுளாக மாறியது இன்றும் கொளத்து நாடு பகுதியில் உள்ள நாட்டுப்புறக் கதைகளில் உள்ளது. கண்ணூர் மற்றும் காசர்கோடு மாவட்டங்களில் உள்ள

பல்வேறு கோயில்களில் தெய்யமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்தத் தெய்யம் பொதுவாக இரவில் அல்லது அதிகாலையில் ஆடப்படுகின்றது. தெய்வம் ஆடும் களம் வாழைப்பழம், பல வண்ண சாயங்கள் மற்றும் நெருப்பு குச்சிகளால் ஆனது. இது செம்மரத்தின் தாரை என அழைக்கப்படுகிறது. அவரது மனைவி செம்மரத்தி என்பது கருத்து. தெய்வத்தின் முகக்கலை நாகம் தாழ்த்தி எழுத்து என்று அழைக்கப்படுகிறது முகத்தில் தாடியும் மீசையும் இருக்கும். வடமலவார் பகுதியில் உள்ள பல பெண்கள் கணவனின் உடல் ஆரோக்கியம் பெறுவதற்காகவும் இன்னும் கதிவர் வீரனை வழிபடுவது வழக்கமாயிற்று.

விஷ்ணுமூர்த்தி தெய்யம் என்பது இந்தியாவின் கேரள மற்றும் கர்நாட காவில் நடன வழிபாட்டின் திய்யா சமூக கோயில் சடங்கு வடிவமாகும். விஷ்ணுமூர்த்தி தெய்யத்தின் நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரம் வரை வித்தியாசமான மேள தாளங்கள் கேட்கும். கோலதாரியின் விஷ்ணுவின் நரசிம்ம அவதாரம் சம்பந்தப்பட்ட நடனம் ஆகும். அதில் ஈடுபடும் உடல் அசைவுகளின் விளைவாகப் பக்தர்களையும் பார்வையாளர்களையும் பரவசப்படுத்துகிறது. விஷ்ணுமூர்த்தியின் தெய்யம் பல கோயில்கள் காவுகள் மற்றும் வீடுகளில் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக இருக்கும் வழக்கமான நடை முறையாகும். நீலேசுஷ்வரம் கோட்டபுரத்தில் உள்ள வைகுண்டேஸ்வரர் கோவிலில் விஷ்ணுமூர்த்தி இருக்கிறார். சிமெனி ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி கோயில் குருவாயூர் என்று அழைக்கப்படும் முத்திரை கேரளாவில் உள்ள புகழ்பெற்ற விஷ்ணுமூர்த்தி கோயிலாகும். வைணவ தெய்யத்தின் மிகவும் பிரபலமான பகுதி விஷ்ணு மூர்த்தியின் சித்தரிப்பு ஆகும். விஷ்ணுவின் சிறந்த பக்தரான பழந்தை கண்ணனின் கதையைச் சொல்கிறது.

சாமுண்டி தெய்யம் என்பது கேரளாவில் நடைமுறையில் உள்ள ஒரு பாரம்பரிய சடங்குகலை வடிவமாகும். இது கேரளாவின் வடமலபார் பகுதியில் தோன்றிய பிரபலமான சமய நிகழ்ச்சி கலையான தெய்வத்தின் ஒரு வடிவமாகும். துர்கா தேவியின் உக்கிர வடிவமாகக் கருதப்படும் சாமுண்டி தேவிக்காகச் சாமுண்டி பெயர் அர்ப்பணிக்கப் பட்டுள்ளது ஆதிபராசக்தியின் அவதாரமான சாமுண்டி, சண்டா மற்றும் உண்டா என்ற அசுடர்களுடன் போரிட்ட, துர்கா தேவியின் புருவத்திலிருந்து பிறந்தாள். தேவி காளியால் ஈர்க்கப்பட்டு அவளைச் சாமுண்டி என்று அழைத்தாள். சடங்கு நிகழ்ச்சி பொதுவாகத் தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட கோயில் அல்லது சன்னதி முன் நடைபெறுகிறது. மேலும் சமூகத்திற்கு ஆசிர்வாதத்தையும் பாது காப்பையும் கொண்டு வருவதாக நம்பப்படுகிறது. கலைஞர் விரிவான ஆடைகள் அணிந்து ஒப்பனைகளுடன் காணப்படுவார். பாரம்பரிய இசை மற்றும் தாளக் கருவிகளுடன் சிக்கலான நடனசைவுகளையும் நிகழ்த்துகிறார். சாமுண்டி தெய்வம் பார்ப்பவர்களுக்கு மிகவும் ஆன்மீகமாகவும் பிரமிக்க வைக்கும் அனுபவமாகவும் கருதப்படுகின்றது. இது சமூகத்தைத் தூய்மைப்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் ஆற்றலை கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது. சாமுண்டி தெய்யத்தில் பல வகைகள் உள்ளன. ஒவ்வொன்றும் அதன் தனித்துவமான அம்சங்கள் சடங்குகள் மற்றும் பழக்க வழக்கங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. இத் தெய்யத்தின் மிகப் பிரபலமான சில வகைகளாவன ரத்த சாமுண்டி, புதிய சாமுண்டி, காளராத்திரி சாமுண்டி, கல்லுருட்டி சாமுண்டி, கரிகால் சாமுண்டி, சந்திரஹாச சாமுண்டி மடையில் சாமுண்டி தெய்யம் என்பனவயாகும்.

குலிகன் என்பது வித்தியாசமான மனநிலைகளைக் கொண்ட தனித்தன்மை வாய்ந்த தெய்யமாகும். துளுநாட்டு பகுதியில் இந்தத் தெய்வம் இந்து கலாச்சாரத்தின் அதிபதியான குலிக தெய்வமாக வழிபடப்படுகின்றது. இந்தத் தெய்யமானது சுற்றுச்சூழல் பிரச்சினைகளிலிருந்து பாதுகாப்பதாகவும் அமைகின்றது. பென்கனகாவில் குலிகா கடவுள் இருப்பதால், பக்கத்துக் கோரோத் நாயர் தரவாடு, கழகக்காரர், கோலக்காரர் ஆகியோர் பெனாகாவில் இரண்டு ஆண்டு களுக்கு ஒரு முறை தெய்யம் திருவிழாவை நடத்துகின்றனர்.. நாதபுரம் அருகே கோழிக்கோட்டில் பட்டரே பரதேவா சேத்திரம் என்ற பெயரில் ஒரு கோவிலில் வருடந்தோறும் குழிகன் தெய்யம் நடத்தப்படுகிறது.

பாற்கடலையால் செய்யப்பட்ட பெரிய தலைக் கவசத்துடன் காணப்படும். இந்தத் தெய்வம் இந்து மதத்தின் கடவுளான யமனைக் குறிக்கின்றது. சிவபெருமானின் இடது கால் விரலில் இருந்து பிறந்ததாகவும் நம்பப்படுகின்றது. இந்தத் தெய்யக்கலைஞர் பொதுவான முகமூடியை அணிந்து உள்ளார். அதில் சிவபெருமானின் திரிசூலம் தலையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தென்னை ஓலைகளின் ஆடைகளைச் சுற்றி உள்ள பகுதியை அலங்கரிக்க ஆபரணங்களாக பயன்படுத்தப் படுகின்றது. புதுமையான ஆபரணமும் தலையில் பெரிய ஏணியை போலத் தோற்றமளிக்கும் மென்மையான இலைகளால் அலங்கரிக்கப்பட்ட பாற்கடலைப் பனையால் செய்யப்பட்ட தலைக்கவசம் காணப்படுகின்றது.

தேவக்கூத்து என்பது கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டத்தில் உள்ள செருகுன்னு அருகே உள்ள தேகம்பாடு கூலோம் தாயக்காவ் கோயிலில் ஆடும் தெய்யமாகும். இக்கூத்தானது பெண்களால் ஆடும் ஒரே தெய்மாகும். பெண் தெய்வங்களின் தெய்யங்கள்கூட பொதுவாக ஆண்களால் ஆடப்படுகின்றன, தேவகூத்துடன் தொடர்புடைய தெய்வம் வள்ளியம்மா என்று அழைக்கப்படுகிறார். தேவக்கூத்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, மலையாள மாதமான தனுவின் (டிசம்பர்) ஐந்தாம் நாளில் நிகழ்த்தப்படுகிறது தேவியின் தெய்யம் வள்ளியம்மா என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் அவள் ஒரு கொடியின் காட்டில் (மலையாளத்தில் வள்ளி) தங்கியிருந்தாள். தெய்யம் நடிப்பில் மற்றொரு பாத்திரம் நாரதர். தேவகூத்தில் வள்ளியம்மை வேடத்தில் நடிக்க மாதவிடாய் இல்லாத பெண்களுக்கு மட்டுமே உரிமை உண்டு.

தெய்யம் கட்டி ஆடப்படும் தெய்வங்கள் எல்லோருமே கேரளாவில் பின்பற்றப்பட்ட சாதி சம்பிரதாயத்தில் பிற்பட்ட சாதியினரின் தெய்வங்களோ, அல்லது அநீதி இழைக்கப்பட்டு உயிரிழந்து இறைவனடி சேர்ந்த, அவர்களது நாயக நாயகிகளாகத்தான் இருக்கிறார்கள் அதனால் அந்தத் தெய்வத்தின் உருவம் கட்டி ஆடுபவர்களும் பிற்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களாகத்தான் இருந்தார்கள். இப்போதும் இருக்கிறார்கள். தெய்யம் கட்டி ஆடும் காலம் என்பது ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் 10 ஆம் தேதியிலிருந்து வைகாசி மாதம் வரை நீண்டிருக்கும் 7 மாத காலம். அக்டோபர் முதல் மே மாதம் வரை. தெய்யம் கட்டி ஆடுதல் பெரும்பாலும் எல்லா கிராமங்களிலும் அங்கு இறைவன் குடியிருக்கும் "காவு" எனும் மரம் சூழ்ந்த பாம்புகளும் பறவைகளும் வாழும் பகுதியில் நடத்தப்படுகிறது. தாண்டவம் மற்றும் லாஸ்ய நடன முறைகள் தெய்யம் கட்டி ஆடும் நடனத்தில் பின்பற்றப்படுகின்றன. தெய்யத்தில் கிரீடம், மார்புக்கவசம், மற்றும் முடி. முடி என்பது முதுகிலிருந்து தலைக்கு மேல் நீண்டு நிற்கும் ஒன்று. சில நேரங்களில் முடியின் உயரம் 20 அடி

முதல் 30 அடி வரை உயர்ந்து நிற்கும். இவைகளில் பலதும் மூங்கில்களில் கீறிய பாகங்கள், கனம் குறைந்த பலகைகள், சிவந்த துணி மற்றும் தென்னங்கீற்றுகளால் உருவாக்கப்படுவதால் அவற்றிற்கு அதிகமான பாரம் இருப்பதில்லை. தெய்யம் கட்டி ஆடும் நபரின் முகத்திலும் உடலிலும் வண்ணம் தீட்டும் முறை பழங்குடி மக்களின் ஓவியக் கலைத்திறனுக்கு உதாரணம் என்றுதான் சொல்ல வேண்டும். இயற்கையாகவே கிடைக்கும் சிவப்பு, ஆரஞ்சு நிறம், மஞ்சள், கறுப்பு மற்றும் வெள்ளை நிறங்கள்தான் பயன்படுத்தப் படுகின்றன. அவை எல்லாம் சந்தனம், சிவப்பு சந்தனம், மஞ்சள், சுண்ணாம்பு, கரி மற்றும் அரிசி மாவு போன்றவைகளில் இருந்து உருவாக்கப்படுவதால் உடலுக்கும் தோலுக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படுவதே இல்லை. உருவம் மாறி காவுக்கு வரும் தெய்யக் கோலம் பூண்டவர் சிறிது நேரத் திற்குள், தான் மேற்கொண்ட உருவமாகவே, தெய்யமாகவே மாறிவிடுகிறார். செண்டை, துடி மற்றும் கொம்பு போன்ற இசைக் கருவிகளில் இருந்து வரும் இசையும், பாடலும், தெய்யத்தின் ஆட்டமும் மாற்றத்தை விரைவுபடுத்துவதுடன் நீண்ட நேரம் அம்மாற்றத்தில் நிலை நிற்கவும் செய்கிறது. தெய்யத்தின் இருகைகளிலும் வாள் மற்றும் கேடயமும் இருக்கும்.

### தெய்யம் நடனக் கலைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

டிசம்பர் முதல் ஏப்ரல் வரையிலான மாதங்களில் தெய்யம் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. கிராமங்களில் வழக்கமான நிகழ்ச்சிகள் இல்லை. எனவே, நடனக்கலைஞர்கள் தையல், சலவை, நெசவு மற்றும் பீடி வேலை போன்ற தொழில்களைச் சார்ந்து வாழ்கின்றனர். மாவிலன் போன்றவர்கள், வேட்டையாடுதல் மற்றும் தேன் சேகரிப்பு ஆகியவற்றைப் பின் பற்றுகின்றனர். அவர்களில் சிலர் சுதேச மருத்துவம் மற்றும் பேயோட்டுதல் போன்றவற்றை மேற் கொள்கின்றனர்.

தெய்யம் நிகழ்ச்சி ஆண்களுக்கு மட்டுமே. இருப்பினும், மலையாளப் பெண்கள் சில சமயங்களில் சடங்குப் பாடல்களைப் படித்து, தங்கள் குடும்ப உறவுகளுடன் திருவிழாவில் பங்கேற்கிறார்கள். நடனக் கலைஞரின் முழு குடும்பமும் அவருக்கு உதவுவதற்காக நிகழ்ச்சி மையத்தின் அருகே கட்டப்பட்ட தற்காலிக கொட்டகை களுக்கு மாறுகிறது. மலையன், வண்ணான், மாவிலன், புலையன், முன்னோட்டன், அஞ்சுட்டன், வேலன், கோப்பாலன், வெட்டுவன் போன்ற குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நடனக் கலைஞர்களாகவும் கலைஞர்களாகவும் பங்கேற்கின்றனர். சாதி விதிகள் மற்றவர்கள் தெய்யம் ஆட அனுமதிக்கவில்லை. மேலும், தெய்யத்தின் ஒரு குறிப்பிட்ட வகை நடனக் கலைஞர்களில் ஒரு குறிப்பிட்ட சாதியினருக்காக மட்டுமே ஒதுக்கப் பட்டுள்ளது. சில இடங்களில், நடனக் கலைஞர்களில் ஒரு குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே நிகழ்ச்சியில் பங்கேற்க முடியும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட குடும்பம் மட்டுமே நடனம் ஆட முடியும். இது ஒரு குடும்ப உரிமை மற்றும் முழுமையான உரிமையாகும், இது செரு-ஜன்மம் அல்லது குட்டி உரிமையினால் உள்ளூரில் அறியப்படுகிறது. மலபாரில் ஜன்மம் அல்லது பிறப்புரிமை என்ற வார்த்தையால் முழுமையான நில உரிமை அறியப்படுகிறது. முழு உரிமையாளரின் அனுமதியுடன் மட்டுமே, மற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட ஆலயத்திலோ அல்லது கிராமத்திலோ ஆவாஹனம் அல்லது நடனம் செய்ய முடியும். கிராமங்களின் குழு ஒன்று அல்லது இரண்டு நடனக் கலைஞர்களின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது. இந்த உரிமை ஒருதலைமுறையிலிருந்து மற்றொரு

தலைமுறைக்கு பரம்பரை பரம்பரை முறையின்மூலம் செல்கிறது. சிலதிருவிழாக்களில் ஜோதிடரின் ஆலோசனைக்குப் பிறகே தலைமை நடனக் கலைஞர் நியமிக்கப்படுவார்.

நடனக் கலைஞர்களிடையே சிறப்பு இல்லை. உதாரணமாக, ஒரு நடனக் கலைஞர் ஒரு இசைக்கலைஞர், ஒரு டிரம்மர், ஒரு ஆடை தயாரிப்பவர் மற்றும் ஒரு முகத்தை ஓவியம் அல்லது ஒப்பனை செய்பவராக இருக்கலாம். மேலே விவரிக்கப்பட்டபடி, ஒரு குறிப்பிட்ட சன்னதியில், நடன உரிமை ஒரு குடும்பத்திற்கு சொந்தமானது. அங்கு, அந்தக் குடும்பம் மற்றொரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை டிரம்மராகவோ அல்லது மேக்கப்பிற்காகவோ அழைக்கலாம். நடனக் கலைஞரால் தெய்வத்தை வழிபடுவதும், சாந்தப்படுத்துவதும் நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாகும்.

பல சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள் நிறை வேற்றப்படுவதால், தெய்யம் திருவிழாக்கள் மிகவும் விலை உயர்ந்தவை. துரதிஷ்டவசமாக ஒரு நடனக் கலைஞருக்கு வழங்கப்படும் ஊதியம் கவர்ச்சிகரமானதாக இல்லை. அவரது கொடுப்பனவின் ஒரு பகுதி அரிசி, நெல், துணி, கோழி, எண்ணெய், தேங்காய் போன்ற பொருளாக உள்ளன. மேலும், புதிய தலைக்கவசம், கிரீடம் போன்றவற்றைத் தயாரிப்பதற்கும், கொலு எனப்படும் சிறிய தொகை ரொக்கமாகவும் கொடுக்கப்படுகின்றன. சன்னதியின் நிதியை நோக்கிச் செல்லும் நிகழ்ச்சியின் போது பக்தர்கள் நடனக் கலைஞருக்கு பணப் பிரசாதம் வழங்குகிறார்கள். இந்தப் பிரசாதத்தின் ஒரு சிறிய பகுதி நடனக் கலைஞருக்கும் வழங்கப்படுகிறது. இசைக் கலைஞர்கள் மற்றும் டிரம்மர்கள் தங்கள் பங்கைப் பெறுகிறார்கள், இது நடனக் கலைஞரின் பங்கைக் காட்டிலும் குறைவு.

## தெய்யத்தின் தற்போதைய நிலை

இது ஒரு வகையான சமூக-அரசியல் நாடகத்தையும் உள்ளடக்கியது, அங்கு முழு சமூகமும் சமூகத்திற்குள் பிரச்சினையை விவாதிக்கவும் தீர்க்கவும் முடியும். ஒவ்வொருவரும் தங்களின் குடும்பத்திலும் சமுதாயத்திலும் தங்கள் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்ளவும், பொது மக்களே தீர்வு காணவும் வாய்ப்பு கிடைக்கும் புனிதமான சடங்காக தெய்யத்தைப் பார்க்கமுடிகின்றது. தெய்யம் கலைஞர்கள் கடுமையாக மாறிவரும் உலகத்துடன் பாடுபடுவதற்கு வேறு வழியில்லை என்பதால், தெய்யம் நடிப்பு பற்றிய கருத்து மாற்றப்பட்டுள்ளது. தெய்யம் நுகர்வோர் சமூகமாக மாறுவதைப் பார்க்கும்போது, அதன் புனிதமான இடத்தில் மாற்றங்கள் தெளிவாகத் தோன்றுகின்றன. தங்களின் வாழ்க்கையின் யதார்த்தத்தை எதிர்கொள்வதால், தற்போது சில அமைப்புகளால் பொழுதுபோக்கு நோக்கத்திற்காக அல்லது குடியரசு தின அணிவகுப்பிற்காக தெய்யம் நடத்தப் படுகிறது அல்லது ஏற்பாடு செய்யப் படுகிறது. கடந்த ஆண்டுகளில் பாதிக்கப்பட்ட சமூக-அரசியல் மற்றும் கலாசாரச் செயல் முறைகளில் பல மாற்றங்கள் உள்ளன. புதிய தலைமுறையினர் இந்தக் கலையை கற்க மறுக்கிறார்கள், ஏனெனில் வழக்கமான வருமானத்திற்கு ஏங்குவதற்கான வாய்ப்பு இல்லை. தற்போது இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த பலர் தங்களது பணியைத் தொடங்கியுள்ளனர். பாரம்பரியத்தைப் பாதுகாக்க சர்வதேச சமூகத்தின் ஆதரவு மிகவும் முக்கியமானது.

## உசாத்துணைகள்

1. Aryan and Dravidian (1977) Elements in Malabar Folklore, Trivandrum.
2. Kurup, K.K.N.(1973) The Cult of Teyyam and Hero Worship in Kerala, Calcutta.
3. Raghavan, M.D. (1947) Folk Plays and Dances of Kerala, Trichur.

4. Thamodharam. M.P.(2008) Theyyam is the best tool for reconstructing the history of north Malabar." Anthropologist 10, Trivandrum
5. https://www.keralatourism.org/artforms/theyyam-ritual/1
6. https://mapacademy.io/article/theyyam/
7. https://www.keralatourism.org/images/ebooks/pdf/theyyam.pdf
8. https://kerala.me/specialities/art-and-culture/theyyam
9. https://youtu.be/CGCKcNSUm5Y?si=f-zg3cW5ezLjw-Kg